www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**9** Register No. [ ]

# முதல் இடைப்பருவத் தேர்வு – 2024

நேரம் : 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 50

**I. பலவுள் தெரிக.** **8x1=8**

1. 'மிசை' என்பதன் எதிர்ச்சொல் என்ன?
   அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை
2. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய
3. தமிழ் விடு தூது ...... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
4. உலகத் தாய்மொழி நாள்
   அ) ஜூன் 21 ஆ) மார்ச் 21 இ) பிப்ரவரி 21 ஈ) அக்டோபர் 21
5. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு.
   அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) வினைத்தொகை
   இ) வேற்றுமைத் தொகை ஈ) பண்புத்தொகை
6. உணவு எனப்படுவது
   அ) நிலம் ஆ) நீர் இ) நிலம், நீர் ஈ) நெல்
7. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்
   அ) மோனை, எதுகை, இயைபு ஆ) இயைபு, அளபெடை, அந்தாதி
   இ) முரண், எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி
8. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 6x2=12**

9. கண்ணணி என்றால் என்ன?
10. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
11. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.
12. கலைச்சொல் தருக. அ) Literature ஆ) Water Management
13. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'. - குறிப்பு தருக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

14. 'கூவல்' என்று அழைக்கப்படுவது எது?

15. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.

அ) சித்திரமும் கைப்பழக்கம் ................

ஆ) கற்றோருக்குச் சென்ற ..................

16. பொருத்தமான வினைமுற்றாக மாற்றுக.

1) உலகில் மூவாயிரம் மொழிகள் ............ (பேசு)

2) குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ............. (செல்)

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 22வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும். 4 x 3 = 12**

17. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

18. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

19. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

20. சோழர் கால குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

21. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

22. 'தித்திக்கும்' - எனத் தொடங்கும் தமிழ்விடு தூது பாடல்

அல்லது

'நீர் இன்று அமையா' - எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்.

**IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க 2x5=10**

23. உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

24. அந்தாதிச் சொற்களை உருவாக்குக : இனிப்பு

25. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**V. எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும் 1x8=8**

26. தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.

27. தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com